பெயர்– சந்திரசேகரன்

தந்தை பெயர்– தயாளன்

நாள்– 15.03.2024

OS NO.165/2014

வா.சா.1 குறுக்கு விசாரணை :

இந்த வழக்கு நிலத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து என்னுடைய நிலம் என்று பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து ஊத்துக்காடு கிராமம் ஏ பிரிவில் உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண்.281/3 ஆகும். தாவா சொத்து விஸ்திரணம் 93 செண்ட் ஆகும். தாவா சொத்து எங்களுக்கு சொந்தமானது 3 தலைமுறையாக நாங்கள் தாவா சொத்தை வைத்திருக்கிறோம். தாவா சொத்து எங்களுக்கு வந்ததை காட்டுவதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/–(R.ராஜேஸ்வரி,B.Com.,L.L.M.,)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காஞ்சிபுரம்.